பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 03 2025 7 15

செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள்

- இந்தியாவின் கலாச்சாரம் மொரீஷியஸ் மக்களிடம் இருப்பது தமக்கு மிகுந்த வியப்பு அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- பிரதமரின் வீடுகளுக்கான சூரிய மின்சக்தி திட்டத்தை குஜராத், மகாராஷ்டிரா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் சிறப்பாக செயல்படுத்தி உள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
- இந்தோ – பங்ளதேஷ் எல்லைப்பகுதியில் சட்டவிரோத கடத்தலை தடுக்க 24 மணி நேரமும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாக உள்துறை இணை அமைச்சர் திரு நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.
- ஜம்மு-கஷ்மீரில் செயல்பட்டு வந்த A A C மற்றும் J K I M ஆகிய இரண்டு தீவிரவாத அமைப்புகளை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தி.ன்கீழ் மத்தி.ய உள்துறை அமைச்சம் தடை செய்துள்ளது.
- மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

இந்தியாவின் கலாச்சாரம், பண்பாடு மற்றும் மாண்புகள் மொரீஷியஸ் நாட்டிலும் பின்பற்றப்படுவது தமக்கு மிகுந்த வியப்பு அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மொரிஷியல் சென்றுள்ள பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில், மொரிஷியஸில் தமக்கு அன்பான வரவேற்பு அளித்த அங்குள்ள இந்திய மக்களுக்கு நன்றியை தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பல தலைமுறைகளைக் கடந்து இந்திய மக்களோடு மொரிஷியஸ் மக்கள் நெருங்கிய உறவை பராமரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சிறப்புமிக்க போஜ்புரி மொழி மொரிஷியஸ் கலாச்சாரத்தோடு பிணைந்திருப்பதை வெளிப்படுத்தும் வகையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் ‘கீத் கவாய்’ கலை நிகழ்ச்சி அமைந்திருந்ததாகவும் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மொரிஷியஸ் முன்னாள் அதிபர் மறைந்த Sir Anerood Jugnauth மறைந்த பிரதமர் Sir Seewoosagur ராம்கூலம் ஆகியோரின் நினைவிடத்தில் பிரதமர் அஞ்சலி செலுத்தினார்.

இரண்டு தலைவர்களும் மொரிஷியஸின் வளர்ச்சிக்காகவும், இந்தியா – மொரிஷியஸ் உறவுகளுக்காகவும் பாடுபட்டவர்கள் என்று அவர் கூறியுள்ளார்.

அங்குள்ள தாவரவியல் பூங்காவில் அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் கீழ் மரக்கன்று ஒன்றையும் பிரதமர் நட்டு வைத்தார்.

[]<<<>>>[]

வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் வேலை தேடி வெளி மாநிலங்களுக்குச் செல்வதை தவிர்க்க அந்தந்த மாநிலங்களிலேயே வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இளைஞர் நாடாளுமன்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், வலிமையான கிராமம் திட்டத்தின் கீழ் வடகிழக்கு மாநிலங்களில் 480 கோடி ரூபாய் செலவில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டிருப்பதாகக் கூறினார்.

பிரம்மபுத்ரா ஆற்றின் குறுக்கே இந்தியாவின் மிக நீளமான ரயில் மற்றும் சாலைப்பாலம் அமைக்கப்படுவதுடன், அஸ்ஸாம் – பூட்டான் இடையே புதிய ரயில் பாதை அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்தியில் பிஜேபி ஆட்சி பொறுப்பேற்ற பிறகு சிக்கிம் மாநிலத்தில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு அமித்ஷா கூறினார்.

[]<<<>>>[]

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் புற்று நோயாளிகள் பராமரிப்பு மையம் ஏற்படுத்தப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், வரும் நிதி ஆண்டில் 200 பராமரிப்பு மையங்கள் அமைக்கப்படும் என்றார்.

புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்ட 30 நாட்களுக்குள் பிரதமரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய சுகாதார இயக்கத்தின் மூலம் குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் திரு ஜெ பி நட்டா கூறினார்.

[]<<<>>>[]

பிரதமரின் வீடுகளுக்கான சூரிய மின்சக்தி திட்டத்தை குஜராத், மகாராஷ்டிரா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் சிறப்பாக செயல்படுத்தி உள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இத்திட்டத்தின்கீழ் இதுவரை பத்து லட்சத்து ஒன்பதாயிரம் வீடுகளுக்கு சோலார் பேனல் கட்டமைப்புகள் அமைத்துத் தரப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

மின் உற்பத்தியில் தற்சார்பு நிலையை எட்டுவதற்கும், குறைந்த செலவில் மின் உற்பத்தி செய்வதற்காகவும் இந்த திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

மத்திய அரசின் உஜாலா திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் இதுவரை சுமார் 37 கோடி எல் இ டி பல்புகள் மலிவு விலையில் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனைத் தெரிவித்த அவர், இந்த திட்டத்தின்கீழ் ஒரு மணி நேரத்திற்கு 48 பில்லியன் கிலோவாட் மின்சாரம் சேமிக்கப்படுவதாகக் கூறினார்.

எல் இ டி பல்புகளில் நச்சுத்தன்மை மிகக்குறைவாக இருப்பதோடு, சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைப்பதாகவும் திரு மனோகர்லால் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

இந்தோ – பங்ளதேஷ் எல்லைப்பகுதியில் சட்டவிரோத கடத்தலை தடுக்க 24 மணி நேரமும் எல்லை பாதுகாப்புப் படையினர் தீவிரமாக கண்காணித்து வருவதாக உள்துறை இணை அமைச்சர் திரு நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று அவர் அளித்த பதிலில், பி எஸ் எப் படையினர் கடந்த பத்து ஆண்டுகளில் இரண்டாயிரத்து 806 கோடி ரூபாய் மதிப்பிலான கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்திருப்பதாகக் கூறினார்.

இந்தோ – பங்ளாதேஷ் எல்லைப்பகுதியில் கடத்தலை தடுக்க பன்முக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எல்லைப்பகுதியில் வேலி அமைக்கும் பணியை மாநில அரசுகள் மற்றும் புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீரில் செயல்பட்டு வந்த ஏ ஏ சி மற்றும் ஜே கே ஐ எம் ஆகிய இரண்டு தீவிரவாத அமைப்புகளை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தி.ன்கீழ் மத்தி.ய உள்துறை அமைச்சம் தடை செய்துள்ளது.

நாட்டின் இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த அமைப்புகள் செயல்பட்டு வருவதால் உடனடியாக சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடை விதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக பிரச்சாரம் மேற்கொள்ளும் தீவிரவாத அமைப்புகளோடு இவற்றுக்கு தொடர்பு உள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

வரும் நிதி ஆண்டுக்கான இரண்டாவது தொகுதி துணை மானியக் கோரிக்கைகள் இன்று மக்களவையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நடப்பு ஆண்டில் ஏற்பட்ட 51 ஆயிரத்து 452 கோடி ரூபாய் செலவினங்களுக்காக நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறும் வகையில் இந்த துணை மானியக் கோரிக்கைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதன் மீதான விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு கௌரவ் ககோய், இந்தியாவுக்கும் - அமெரிக்காவுக்கும் இடையேயான வரி தொடர்பான பேச்சுவார்த்தைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார்.

மணிப்பூர் மாநில பட்ஜெட் குறித்தும் இன்று மக்களவையில் விவாதிக்கப்பட்டது.

இந்த விவாதத்தில் பேசிய பிஜேபி உறுப்பினர் திரு விப்லப் குமார் தேவ், மணிப்பூரின் வளர்ச்சிக்காக மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி உள்ளதாகக் கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களிலிருந்து பாதுகாப்புப் படையினர் திரும்பப் பெறப்பட்டு அப்பகுதிகளில் வளர்ச்சிக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மததிய கல்வித்துறையின் செயல்பாடுகள் குறித்த விவாதம் இன்று மாநிலங்களவையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு திக் விஜய் சிங், ஆசிரியர்களின் திறனை மேம்படுத்த அவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

பல்கலைக்கழகங்களில் இளநிலை ஆராய்ச்சி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை தாமதமாக வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

பிஜேபி உறுப்பினர் திரு கன்ஷியாம் திவாரி, கல்வி கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் 41 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர், 14 ஆயிரத்து 500 பள்ளிகளில் நவீன வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாகக் கூறினார்.

திரிணமூல் காங்கிரஸ் உறுப்பினர் திரு ரீட்டா பிரத்த பானர்ஜி, கல்விக்கான கல்விக்கான ஒதுக்கீடு தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பூஜ்ஜியம் புள்ளி மூன்று ஏழு சதவீதமாக உள்ளது என்றும், இதனைஅதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

தேர்தல் தொடர்பாக நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஆலோசனைகளை அடுத்த மாத இறுதிக்குள் தெரிவிக்குமாறு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளையும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டள்ள தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பில், தேர்தல் பதிவு அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தலைமை தேர்தல் அதிகாரிகள் நிலையிலான பிரச்சினைகளுக்கு தனித்தனியா ஆலோசனைகளை தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் நடைமுறைகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மூத்த தலைவர்கள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தவும் தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற தேர்தல் ஆணையத்தின் மாநாட்டில் தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார், அனைத்து நிலையிலான தேர்தல் அதிகாரிகளுக்கும் இது தொடர்பான ஆலோசனைகளை வழங்கி உள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை — பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்றைய ஆட்டத்தில் பெங்களூரு அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

[]<<<>>>[]

இந்திய மல்யுத்த சம்மேளனம் மீதான தடையை மத்திய விளையாட்டு அமைச்சகம் நீக்கியுள்ளது.

இந்த சம்மேளனம் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களையும் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

வீரர், வீராங்கனைகளின் தேர்வுகள் நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், உலக மல்யுத்த விதிமுறைகளை பின்பற்றியும் இருக்க வேண்டும் என்றும் அந்த அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இதன்மூலம் ஜோர்டானின் அம்மானில் நடைபெறவுள்ள ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்திய வீரர்கள் பங்கேற்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

*End of News*